**27.11.2025**

**C.C. No. 25/2025**

**ம.சா.1. சோலைமலை த/பெ. ரெங்கநாதன், காரைக்குடி**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) நான் எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை எதிரியின் வீட்டிற்கு அருகில் இருந்தேன் என்றால் 2022 முதல் டிசம்பர் 2024 வரை எதிரியின் வீட்டு அருகில் வசித்து வந்தேன். நான் வாடகைக்கு செல்வதற்கு முன்பே எதிரி அங்கு குடியிருந்து வந்தார். நான் எதிரியின் வீட்டருகே வசித்து வந்தற்கு எந்த ஆவணமும் இல்லை. நான் எதிரியின் வீட்டில் அருகில் இருந்ததற்கு நான் எனது புகார் மனுவில் தெரு பெயர் மற்றும் முகவரி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 22.01.2024, 23.01.2024 ஆகிய தேதிகளில் கடன் கொடுத்ததாக சொல்வதை எனது அலைபேசி வங்கி பரிவர்த்தனை மூலம் செய்தேன். எதிரிக்கு நான் 3 சதவீத விகிதம் பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல நான் வட்டிக்கு கடன் கொடுக்கவில்லை. கைமாத்தாக கொடுத்தேன். நான் கொடுத்தாக சொல்லப்படும் தொகை ரூ. 3 லட்சம் ஆனால் வழக்கு தொடுத்த தொகை ரூ.4 லட்சம். நான் வருமான வரி எதுவும் செலுத்தவில்லை.

2) அ.சா.ஆ 7 ஆவணத்தில் நான் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்த வாக்குமூலமானது எனது வழக்கிற்கு உரியதுதான். அது என் வழக்கு தொடர்பானதுதான். எனது வாக்குமூலத்தில் உள்ளது சரியானதுதான். நான் எதிரியிடம் பணத்தை திருப்பி கேட்டபோது எதிரி வீட்டிலிருந்து காசோலையை கொடுத்தார். நான் கடன் கொடுத்ததாக சொல்லும் ரூ. 2 லட்சத்து 5 ஆயிரம் என் சகோதரியிடம் இருந்து பெற்றது. எதிரி கடன் பெற்றபோது எதிரியுடன் யார் யார் உடன் இருந்தனர் என்றால் உடன் யாரும் இல்லை. எதிரி காசோலையை கொடுத்தபோதும் யாரும் உடன் இல்லை. காசோலையை பூர்த்தி செய்தது எதிரிதான் பூர்த்தி செய்த நிலையில் என்னிடம் கொடுத்தார். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் ரூ. 3 லட்சம் தொகையை எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் நினைவில் இல்லை. காசோலை கொடுத்த தேதி என்னவென்றால் தேதி நினைவில்லை.

எத்தனை மணிக்கு கொடுத்தார் என்றால்  எதிரி வீட்டில் வைத்து சுமார் காலை 10.00 மணிக்கு கொடுத்தார்.

3) நான் பணம் வசூலிக்கும் வேலையை எப்போதிலிருந்து செய்து வருகிறேன் என்றால் 2022 முதல் முருகானந்தம் என்பவரிடம் வேலை செய்து வருகிறேன். எனது மாத வருமானம் ரூ. 50 ஆயிரம் இருக்கும். எனக்கு 2 வங்கிகளில் வங்கி கணக்கு உள்ளது. 2023 ல் எனது வங்கி கணக்கில் எவ்வளவு தொகை இருந்தது என்றால் தொகை வைத்திருப்பதில்லை தொழிலுக்ககாக அதை பயன்படுத்தி வருகிறேன். எனக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி கிடையாது என்றால் சரியல்ல. நான் கடன் எதுவும் கொடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் காசோலையை முறைகேடாக பயன்படுத்தி அக்கிரமலாபம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில்இவ்வழக்கை முன்னெடுத்து உள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த குற்றத்தையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எதிரி எவ்வித தொகையும் கொடுக்க சட்டப்படி கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்கு உரியது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.11.27 16:21:22 +0530

நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்இ காரைக்குடி.( மு.கூ.பொ)